# செய்தி வெளியீடு

## டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளில் அவரது பரிமாணங்களைப் போற்றும் வகையில் அமைக்கப்பட்ட குழுக்களில் "இதழாளர்–கலைஞர்"என்ற குழுவின் முதல் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

*****

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாக கொண்டாடுவது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 22.5.2023 அன்று தலைமைச் செயலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளில் அவரின் பரிமாணங்களை போற்றும் வகையில், 12 தலைப்புகளில் குழுக்கள் அமைத்து நூற்றாண்டு விழாவை கொண்டாட வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இதன் தொடர்ச்சியாக, "இதழாளர் – கலைஞர்" என்ற தலைப்பிற்கான குழுவின் முதல் கூட்டம், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்களின் தலைமையில், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் மற்றும் மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் திரு.த.மனோ தங்கராஜ் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் இன்று 15.06.2023 சென்னை கலைவாணர் அரங்க வளாகத்தில் உள்ள மாநில செய்தி நிலைய கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநரும் உறுப்பினர் செயலருமான திரு.த.மோகன்,இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார்கள். உறுப்பினர்களான திரு.நக்கீரன் கோபால், திரு.விஜய் சங்கர், திரு.பாபு ஜெயக்குமார், திரு.கோவி.லெலின், திரு.மு.குணசேகரன், திரு.செந்தில்வேலன் ஆகியோர் நேரிலும், திரு.அருண் ராம், திரு. இந்து ராம் மற்றும் திரு.வைத்தியநாதன் ஆகியோர் காணொலி காட்சியிலும் கலந்துக்கொண்டனர்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள், நவீன தமிழ்நாட்டை உருவாக்கியதில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பங்கு மிகவும் அளப்பரியது என்று போற்றினார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முக ஆற்றலையும், மக்களுக்காக செயல்படுத்திய நலத்திட்டங்களையும் வருங்கால தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில் செய்திட தெரிவித்தனர். பத்திரிகையாளர்களை அரவணைத்த விதம் குறித்தும், அவர்களுக்கு வழங்கிய நலத்திட்ட உதவிகள் குறித்தும் குறிப்பாக, பல்வேறு மாவட்டங்களில் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் வழங்கிய குடியிருப்புகளை எடுத்துரைத்தனர்.

மேலும், பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே "கலைஞர் எனும் பத்திரிகையாளர்" என்ற தலைப்பில் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகள் நடத்திடலாம் எனவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உதிர்த்த பொன்மொழிகளை ஒட்டுவில்லையாக வெளியிடலாம் எனவும், கலைஞருடைய முழுப் பரிமாணங்களை ஆங்கிலத்தில் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யலாம் எனவும், தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களில் கலைஞர் நினைவு விருது வழங்கலாம் எனவும் கருத்து தெரிவித்தனர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை போற்றும் விதமாக பாடல் வெளியிடவும், அவரின் வாழ்க்கை வரலாற்றினை அறிந்திடும் வகையில் நிரந்தரப் புகைப்படக் கண்காட்சி அமைத்திடவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்ட போராட்டங்களைப் பற்றி இளம் தலை முறையினர் அறிந்திட வழிவகை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனவும், அவரது வாழ்க்கை வரலாற்றினை திரைப்படமாக எடுக்கலாம் எனவும், இதழியல் 6 மாத காலம் சான்றிதழ் படிப்பு தோற்றுவிக்கலாம் என்றும் உறுப்பினர்களால் ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், உறுப்பினர்களின் ஆலோசனைகளை கருத்தில் எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்தனர்.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in